**FIRST INFORMATION REPORT** **TAMIL NADU POLICE**
**முதல் தகவல் அறிக்கை** INTEGRATED INVESTIGATION FORM-I
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்) C 8102059

1. District மாவட்டம் : Sivaganga, PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 03/2020 Date: நாள் 16.10.2020

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Sections பிரிவுகள்: 7 (a)
(iii) Act சட்டம்: Act 16 of 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 13.10.2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.10.2020 Time : நேரம் 08.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume I Time : நேரம் 08.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Municipality office, Devakottai 50 km East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Sittu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K.S. [illegible]
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1962 (58/2020) (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Home maker (g) Address : முகவரி 17, Thenammai Oorani melkarai, Devakottai, Sivagangai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Veluchamy, Revenue Inspector, municipality office, Devakottai, Sivagangai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— No delay —

GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 16.10.2020ம் தேதி காலை 08.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திருமதி.K.சிட்டு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுபை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட தேவகோட்டை நகராட்சி, வருவாய் ஆய்வாளர் திரு.வேலுச்சாமி என்பவர பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவரின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு கமற்றும் கண்காணிப்புத்துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 16.10.2020ம் தேதி 08.45 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2020 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் K.சிட்டு, க/பெ.K.S.காளீஸ்வரன், க.எண்.17,தேனம்மை ஊரணி

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.சிட்டு 16/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16. 10. 2020

Name: பெயர் T. மணிமன்னன்.
Rank: நிலை ....................No. எண் ........
DSP / VAC / SVG

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.03/2020 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி-

மேல்கரை, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், சிவகங்கை, ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு தற்போது 58 வயதாகிறது. எனது கணவர் திரு.K.S.காளீஸ்வரன் கார், பைக் வாகனங்கள் வாங்கி விற்கும் புரோக்கர் வேலையும், வாகனங்களுக்கு பைனான்ஸ் வாங்கிகொடுக்கும் வேலையும் செய்து வருகிறார். எனக்கு நாகநாதன் மற்றும் ஐயப்பன் ஆகிய இரண்டு மகன்கள் உள்ளனர். தேவகோட்டை, தேனம்மை ஊரணி கீழ்கரை தெருவில் உள்ள 16 செண்ட் (5710 ச.அடி) மனையிடத்தை 25.09.2012 அன்று எனது பெயரில் கிரையம் வாங்கினேன். கடந்த 3 மாதத்திற்கு முன்னர் மேற்படி மனையிடத்தில் 21 அடி X 16 அடி நீள அகல முறையில் ஹாலோ பிளாக்ஸ் வைத்து சுவர் கட்டி, கூலிங் சீட்டு போட்டு வீடு கட்டியுள்ளேன். தற்போது இந்த வீட்டில் நான், இளைய மகன் ஐயப்பன் குடும்பத்தோடு வசித்து வருகிறேன். மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்கு வீட்டு வரி ரசீது தேவைப்பட்டது. அதனால் சுமார் 1 1/2 மாதத்திற்கு முன்னர் வீட்டு வரி ரசீது பெறுவதற்கு தேவகோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த R.I. திரு.வேலுச்சாமி என்பவரிடம் வீட்டின் பட்டா மற்றும் பத்திரத்துடன் வீட்டு வரி ரசீது வேண்டி விண்ணப்பித்தேன். 12.10.2020 அன்று திங்கட்கிழமை மதியம் R.I.திரு.வேலுச்சாமி மற்றும் Bill Collector விஜய் ஆகியோர் நான் புதிதாக கட்டியுள்ள எனது வீட்டிற்கு வந்து ஆய்வு செய்தார்கள். 13.10.2020 அன்று மாலை சுமார் 4 மணியளவில் நான், எனது கணவர் திரு.காளீஸ்வரனுடன் தேவகோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று R.I வேலுச்சாமி அவர்களை சந்தித்து எனது வீட்டு வரி ரசீது தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் தங்களது இடத்திற்கு தரை வரி போட்ட பின்னர் வீட்டு வரி போடனும், இரண்டு வேலை இருக்கு, தரை வரி போடுவதற்கு கட்டணம் ரூ.12,600/- வரும். அதை நான் சொல்லும்போது Bill collector விஜய்-க்கிட்ட கொடுத்திடுங்க, நீங்க கூலிங் சீட்டு போட்டு வீடு கட்டியிருக்கீங்க, இந்தமாதிரி வீட்டுக்கு வீட்டு வரி போடுறது கஷ்டம். நான் உங்களுக்கு போட்டுத்தறேன், அதுக்காக எனக்கு தனியாக ரூ.4,000/- கொடுங்க, ரூபாயை ஒரு கவரல போட்டு கொடுங்க, நான் வீட்டு வரி ரசீது போடுவதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று சொன்னார். நான் அவரிடம், தற்போது பணம் கொண்டுவரவில்லை, ரொம்ப பணக்கஷ்டத்தில் இருக்கேன், கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு கூறினேன். அதற்கு அவர், சரி ரூ.2000/- கொடுங்க,

நான்கைந்து நாட்களுக்குள் ரூ.2000/-ஐ கொண்டு வாங்க, நான் இல்லைனா, Bill collector-க்கிட்ட கொடுத்திட்டு போங்க, நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார். நான் அவரிடம், உங்கக்கிட்டேயே ரூ.2000/-ஐ கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு R.I. வேலுச்சாமி என்னிடம், சரி வெள்ளிக்கிழமைக்குள் வந்து பணத்தை கொடுங்க, அப்பத்தான் உங்களுக்கு வீட்டு வரி இரசீது போட ஏற்பாடு செய்ய முடியும் என்று சொன்னார். நான் அவரிடம் சரி என சொல்லிவிட்டு நானும் எனது கணவரும் வந்துவிட்டோம். நான் எனது மருத்துவ செலவுக்காக சேர்த்து வைத்திருந்த பணத்தில் இருந்துதான் வீட்டு வரி இரசீது கட்டணம் செலுத்தவுள்ளேன். இந்நிலையில் வீட்டு வரி இரசீது போட்டுத்தருவதற்கு R.I. வேலுச்சாமி என்னிடம் ரூ.2000/- லஞ்சம் கேட்டதனால் நானும் எனது கணவரும் பணக்கஷ்டத்தினால் மிகுந்த மன வேதனை அடைந்தோம். எனக்கு லஞ்சம் கொடுத்து வீட்டு வரி இரசீது வாங்குவதற்கு விருப்பம் இல்லை. ஆகவே, வீட்டு வரி ரசீது போடுவதற்கு என்னிடம் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம்) லஞ்சம் கேட்ட தேவகோட்டை நகராட்சி R.I. வேலுச்சாமி என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம்.K.சிட்டு, 16/10/2020.

Sir, Received the complaint on 16.10.2020 at 08.00 hrs and conducted confidential enquiry. I registered a case in Sivagangai V&AC Cr.No.3/2020 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 16.10.2020 at 08.45 hrs. sd.I.Manimannan, DSP, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

[I. MANIMANNAN]
DEPUTY SUPERINTENDENT OF POLICE,
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SIVAGANGAI.